அருங்காட்சியகங்கள் துறை இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்
முன்னிலை:சி.அ.ராமன், இ.ஆ.ப.

..........

ந.க.எண்.2348/2021/இ2 நாள்.18.11.2021

பொருள்: அருங்காட்சியகங்கள் துறை - பணியமைப்பு தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் - நேரடி நியமனம் - தொகுதி IV பணியிடங்கள் - தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்ட செல்வி.சு.ஷாலினி, இளநிலை உதவியாளர் பணிகள் வரன்முறை செய்து ஆணையிடுதல் - தொடர்பாக.

பார்வை: 1 தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், கடித எண். 2379/PSD-A1/2020, நாள்.26.05.2020
2 இவ்வலுவலக கடித எண்.3437/2018/இ2, நாள்.10.08.2020
3 இவ்வலுவலக கடித எண்.329/2021/இ2, நாள்.24.02.2021

..........

பார்வை 2-ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தெரிவு செய்யப்பட்ட இளநிலை உதவியாளர் செல்வி.சு.ஷாலினி, என்பவர் நாகப்பட்டினம் அரசு அருங்காட்சியகத்தில் பணியமர்த்தம் செய்யப்பட்டு 24.08.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வந்தார்.

பார்வை 3-ல்காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி, இவர் சென்னை அரசு அருங்காட்சியகத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்டு, 25.02.2021 முற்பகல் முதல் சென்னையில் பணிபுரிந்து வருகிறார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி வரையறைகள்) சட்டம்-2016 (Tamilnadu Government Servants (Condition of Service) Act, 2016-No.14 of 2016) பிரிவு-28(i)-ன்படி, மேற்படி அலுவலர் செல்வி.சு.ஷாலினி, இளநிலை உதவியாளர் பணி 24.08.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

மேலும் இவர் மூன்று ஆண்டு காலம் தொடர்ந்து பணியாற்றுதலுக்குட்பட்டு இரண்டு ஆண்டுகாலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயித்து ஆணையிடப்படுகிறது. இவர் தகுதிகாண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் (District Office Manual) தேர்வு மற்றும் பவானிசாகர் அரசு பயிற்சி நிலையம் நடத்தும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை நிலை பயிற்சியினை முடித்து, தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னரே தகுதிகாண் பருவம் முடித்தமைக்கான ஆணை வழங்கப்படும் என அறிவிக்கப்படுகிறது.

ஓம்/-.........
இயக்குநர்

// ஆணைப்படி //

22.11.2021
உதவி இயக்குநர் (நிர்வாகம்)
அரசு அருங்காட்சியகம், சென்னை-8

பெறுநர்
செல்வி.சு.ஷாலினி,
இளநிலை உதவியாளர்,
அரசு அருங்காட்சியகம்,
சென்னை.

22/11/21